**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி**: 02.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 24/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-2 |
| **சாட்சியின் பெயர்** | : | சுமதி |
| **கணவர் பெயர்** | : | சங்கர் |
| **கிராமம்** | : | மலையூர் |
| **தாலுக்கா** | : | கூத்தாநல்லூர் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 50 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 ,2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவன். அ.சா-1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உடையார் சாதியை சேர்ந்தவர்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக 1ம் எதிரி எனது மகன் அ.சா-1 சூரியா-விற்கு போன் செய்தார். நான் அத்திச்சோழமங்கலம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வந்ததால் தண்ணீர்

ஏதும் வரவில்லையோ என்று நினைத்து நானும் எனது மகனும் 1ம் எதிரி வீட்டிற்கு இரண்டு சக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் சென்றவுடன் உங்கள் அப்பா வாங்கிய கடன் ரூ.3,00,000/- எப்போது கொடுக்க போற என்று 1ம் எதிரி கேட்டார். அதற்கு நாங்கள் எங்கள் வீட்டுக்காரர் வாங்கிய கடன் எல்லாம் கொடுத்து விட்டார். கடன் ஏதும் பாக்கி இல்லை என்று எனது கணவர் எங்களிடம் கூறிவிட்டார் என்று சொன்னேன். அப்போது உங்கள் அப்பா வாங்கிய கடனை நீதான் கொடுக்கனும் என்று 1ம் எதிரி எனது மகன் அ.சா-1 சூரியா-வை கட்டையால் அடித்தார். 2ம் எதிரி கங்காதரன் எனது மகன் அ.சா-1 சூரியா கன்னத்திலும், மூக்கிலும் குத்தினார். நாங்கள் சத்தம் போட்டவுடன் அருகே இருந்த மல்லிகா, தனபால் ஆகியோர் வந்து சமாதானம் செய்தார்கள். எனது மகன் அ.சா-1 சூரியாவிற்கு மூக்கிலும், வாயிலும் இரத்தம் வந்ததை பார்த்து சதீஷ் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். சிகிச்சையில் இருந்த போது கொரடாச்சேரி போலீசார் எங்களை விசாரித்தார்கள். நடந்த விவரம் சொன்னேன். பின்னர் திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் வந்து விசாரித்தாரகள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.02 16:09:25 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.